**தலைப்பு 13 – இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 013- மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 29 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவிற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 யூன் 26 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்

தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்வதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 50 இன் பிரகாரம் செலவின மதிப்பீடுகள் முடிந்தவரை முழுமையாகவும் துல்லியமாகவும் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் 06 மீண்டெழும் செலவின விடயங்களில் மொத்தம் ரூபா 6,674,000 ஆன ஒதுக்கீடுகள் ஏனைய 10 மீண்டெழும் செலவின விடயங்களுக்கு நிதிப் பிரமாணம் 66 இன் மாற்றப்பட்டிருந்தது. | 2022 இல் அதிக பணவீக்கம், மின்வெட்டு காரணமாக ஜெனரேட்டர்களுக்கு எரிபொருள் பெறப்பட்டமை, போராட்ட காலங்களில் அதிகாரிகளை பணியமர்த்த வேண்டியேற்பட்டமை போன்ற காரணங்களால் ஒதுக்கங்கள் போதியளவு இல்லாமையால் செலவுக்கட்டுப்பாடு மற்றும் அத்தியாவசியமற்ற கடமைகளை நிறுத்துவதற்காக வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் அடிப்படையில் ஏற்பாடுகளின் சேமிப்பு மிக அவசர மற்றும் அத்தியாவசிய கடமைகளுக்கு கூட கட்டுநிதிகள் மட்டுப்படுத்தப்பட்டமை இதற்கு காரணமாக இருந்தது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் செலவின மதிப்பீடுகள் முடிந்தவரை முழுமையாகவும் துல்லியமாகவும் தயாரிக்கப்பட வேண்டும். |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பொறுப்புகள் பற்றிய கூற்றில் குறிப்பிடப்படாத 4 செலவு விடயங்கள் தொடர்பாக மொத்தம் ரூபா 3,038,056 ஆன பொறுப்புகளுக்காக 2023 ஆம் ஆண்டின் கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டிருந்தன. | பொறுப்புகள் பதிவேட்டை பராமரிப்பதில் குறைபாடுகள் இருப்பதை ஒப்புக்கொள்கிறேன். எதிர்காலத்தில், பொறுப்புகள் பதிவேட்டை சரியான முறையில் தயாரிக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், அது நாளதுவரையாக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. | ஆண்டு தொடர்பான அனைத்து பொறுப்புகளும் உள்ளடங்கியதாக பொறுப்புகள் பற்றிய கூற்று சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நிதிப் பிரமாணம் 94(1) இற்கு முரணாக, மேற்குறிப்பிடப்பட்டுள்ள 4 செலவின விடயங்களில் 2 செலவின விடயங்கள் முறையே ரூபா 4,956,000 மற்றும் ரூபா 40,700,000 ஆன தேறிய ஒதுக்கீட்டை விஞ்சியதாக ரூபா 111,700 மற்றும் ரூபா 89,115 ஆன பொறுப்புகளுக்காக உடன்பட்டிருந்தன. | வருடத்தின் போது தொலைபேசி கட்டணங்கள் அவ்வப்போது அதிகரிக்கப்பட்டமை மற்றும் வருடத்தின் நடுப்பகுதியில் வரிகள் திருத்தப்பட்டமையே இதற்குக் காரணமாகும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

மாதிரி கணக்காய்வு பரீட்சிப்புக்களில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணக்கம் காணப்படாத சந்தர்ப்பங்கள் கீழே விபரிக்கப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | | |
| (அ) | 2018 இன் 19 ஆந் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16.2 ஆம் பிரிவு | மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயலாற்றல் அறிக்கையின் வரைவு நிதிக் கூற்றுக்களுடன் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | 2022 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கை தயாரிக்கப்பட்ட வருகின்றது. | தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

(ஆ) அரச நிதிச் சுற்றறிக்கை

(i) 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க சுற்றறிக்கை

| | | | |
|---|---|---|---|
| • 11.1.6 ஆம் பிரிவு | ஒவ்வொரு நிதி ஆண்டிலும் யூன் 15 ஆந் திகதிக்கு முன்னர் சென்ற ஆண்டின் பொருட் கணிப்பீட்டு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், ஆணைக்குழு 2022 ஆம் ஆண்டிற்கான பொருட் கணிப்பீட்டு அறிக்கை 2023 மே 29 ஆம் திகதி வரை சமர்ப்பிக்கப்படாததுடன் 2021 ஆம் ஆண்டிற்கான அறிக்கையின் ஒரு பகுதி 06 மாத கால தாமதத்தின் பின்னர் 2022 திசெம்பர் 09 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அவ் அறிக்கையில் கல்முனை பிராந்திய அலுவலகம் மற்றும் நுவரெலியா, மன்னார், பத்தளம் ஆகிய உப அலுவலகங்களின் பொருட் கணிப்பு அறிக்கைகள் உட்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டிற்கான சகல பிராந்திய அலுவலகங்களினதும் பொருட் கணிப்பீடு முடிக்கப்பட்டு அவற்றின் அறிக்கைகள் இத்துடன் சமர்ப்பிக்கப்படுவதோடு தலைமை அலுவலகத்தின் பொருட் கணிப்பீடு முடிக்கப்பட்டு வருகின்றது. | சுற்றறிக்கை பிரகாரம் செயற்படுதல் வேண்டும். |
| • 11.1.5 ஆம் பிரிவு | மேற்படி சுற்றறிக்கையின் பிரகாரம் ஒவ்வொரு நிதி ஆண்டிலும் ஏப்ரல் 30 ஆந் திகதிக்கு முன்னர் பொது 47 அறிக்கையின் படி, தள்ளுபடி செய்யப்பட வேண்டிய, புதுப்பிக்கப்பட வேண்டிய, விற்பனை செய்யப்பட வேண்டிய மற்றும் வேறு நிறுவனங்களுக்கு கையளிக்கக் கூடிய பொருட்கள் தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட | 2020 வருடம் பிரதான அலுவலகத்தின் பொது 47 இனை தள்ளுபடி செய்வதற்காக உத்தேச பொருட்கள் புத்தளம் கமநல சேவைகள் அலுவலகத்திற்கு மாற்றப்பட்டன. | சுற்றறிக்கை பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வேண்டிய போதிலும் அவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | | |
| (ii) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 12.1 ஆம் பந்தி | நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்கு முன்னர், வருடாந்த செயல்திறன் அறிக்கை மூன்று மொழிகளில் தயாரிக்கப்பட்டு பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் , 2021 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கை 2023 மே 29 வரை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. | 2021 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கையின் தமிழ் பதிப்பை சரிபார்த்து அச்சிட தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. 2022ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கை தயாரிக்கப்பட்டு வருகின்றது. | சுற்றறிக்கை பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (இ) | பொது நிர்வாகச் சுற்றறிக்கை | | | |
| (i) | 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க சுற்றறிக்கை | உள்ளகக் கட்டுப்பாட்டைப் பேணுவதற்கு, ஒவ்வொரு நிறுவனத்தின் அதிகாரிகளின் வருகை மற்றும் வெளியேறுகை , வருகைப் பதிவேட்டில் கையொப்பமிடுவதன் மூலம் உறுதிப்படுத்தப்படுமாயின் அது கைரேகை இயந்திரத்தைப் பயன்படுத்தும் முறைமைக்கு மேலதிகமாக செய்யப்பட வேண்டமென குறிப்பிட்டப்பட்டிருந்தும் . ஆணைக்குழுவின் இரண்டு அதிகாரிகளின வருகை மற்றும் வெளியேறுகை கைரேகை இயந்திரத்தில் . பதிவு செய்யப்படவில்லை. | ஆணைக்குழுவின் இரண்டு அதிகாரிகளின் கைரேகைகளை கைரேகை இயந்திரத்தில் பதிவதற்கு நீண்ட நேரம் முயற்சி செய்ய வேண்டியிருந்தது. இந்த தொழில்நுட்ப பிழை காரணமாக வருகை பதிவேட்டில் கையொப்பம் இடப்பட்டது. | சுற்றறிக்கை பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ii) | 2018 சனவரி 24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க சுற்றறிக்கை | 2022ஆம் ஆண்டிற்காக ஆணைக்குழுவினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட மனிதவள அபிவிருத்தி திட்டம சுற்றறிக்கையில் | உரிய சுற்றறிக்கையின் சிக்கலான நிலைமை ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் ஆணைக்குழுவின் பணிப்பாளர்-நிர்வாகம் மற்றும் நிதியினால் | மனிதவள அபிவிருத்தி திட்டம சுற்றறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ள |

| | | | |
|---|---|---|---|
| | குறிப்பிடப்பட்டுள்ள மாதிரியின்படி தயாரிக்கப்படவில்லை. | பொது நிர்வாக அமைச்சிடம் வினவியபோது, அது இயங்கும் நிலையில் காணப்படாமையால் அதை தயாரிப்பதற்கான ஆலோசனைகள் எதுவும் பெறப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. | மாதிரியின்படி தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஈ) 2022 ஏப்ரல் 26 ஆந் திகதிய 03/2022 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை | தேவையற்ற செலவுகளாக கருதப்படும் அனைத்துச் செலவுகளுக்கும் அரச நிதியை பயன்படுத்த முடியாதென அறிவுறுத்தப்பட்டிருந்தும் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்கான வருடாந்த அறிக்கைகளைத் தயாரிப்பதற்காக ஆணைக்குழுவிற்கு மீளாய்வாண்டில் மொத்தம் ரூபா 210,000 செலுத்தப்பட்டிருந்தது. | ஆண்டறிக்கை தயாரிப்பதில் அனுபவம் வாய்ந்த அலுவலர் இல்லாததால், சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு முரணாக வெளியே உள்ள ஒருவரிடமிருந்து அறிவைப் பெற வேண்டியேற்பட்டது. | சுற்றறிக்கை பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆணைக்குழுவினால் 2022 சனவரி 01 முதல் 2022 நவம்பர் 29 வரையிலான காலப்பகுதியில் அரசாங்க நிறுவனங்களுக்கு 72 பரிந்துரைகள் வழங்கப்பட்டிருந்தும் அவற்றில் 66 பரிந்துரைகள் அதாவது 91 சதவீதம் மற்றும் 2021 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட 88 பரிந்துரைகளில் 59 பரிந்துரைகள் அதாவது 67 | மேற்படி பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தாத பொறுப்பு அந்தந்த பிரதிவாதி நிறுவனங்களுக்கு மாற்றப்பட்டு, சட்டத்தின் விதிகளின்படி பரிந்துரைகளை வழங்கி ஆணைக்குழு தனது பொறுப்பை நிறைவேற்றியுள்ளது. ஆனால் அந்த பரிந்துரைகளை அமல்படுத்துவது தொடர்பாக | கொடுக்கப்பட்ட பரிந்துரைகளை அமல்படுத்துவதில் கவனம் செலுத்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| சதவீதம் கணக்காய்வுத் திகதியான 2022 திசெம்பர் 15 வரை செயற்படத்தப்பட்டிருக்க வில்லை. | ஆணைக்குழு தேவையான தலையீடுகளை மேற்கொண்டு வருகின்றது. | |
| (ஆ) 2022 நவம்பர் 30 இல் , ஆணைக்குழுவிடம் முடிக்கப்படாத 10,029 கோவைகள் காணப்பட்டதுடன் அவற்றில் 13 சதவீதம் அதாவது 1,340 கோப்புகள் 3 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட மற்றும் 109 கோப்புகள் 10 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட பழைய கோவைகள் ஆகும். | கோவிட் தொற்றுநோய் காரணமாக, விசாரணை நடவடிக்கைகள் புறக்கணிக்கப்பட்டமை, பணியில் உள்ள அதிகாரிகள் அவசர புகார்களை விசாரித்தமை மற்றும் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகள் முடிந்த பிறகு மனுதாரர்களின் கோரிக்கையின் பேரில், மனித உரிமை மீறல்கள் நடந்த இடங்களுக்கு அனுப்பப்பட்டமை மற்றும் 10 ஆண்டுகளுக்கும் மேலாக மீதமுள்ள 109 கோப்புகளை குறிப்பிட வேண்டியமை, இது சம்பந்தப்பட்ட பிரதிவாதிகள் வேறு இடங்களுக்கு மாற்றப்படுதல் மற்றும் முக்கியமாக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் வெற்றிடங்கள் காணப்படுவதும் காரணங்களாகும். | விசாரணைகளை விரைவில் முடிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆணைக்குழுவிற்குச் சொந்தமான 3 புகைப்பட பிரதியெடுக்கும் இயந்திரங்கள் பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டதுடன் அவற்றில் 2 இயந்திரங்கள் 2019 ஆம் ஆண்டு முதல் விளைவற்றுக் காணப்பட்டன. | இந்த புகைப்பட பிரதியெடுக்கும் இயந்திரங்கள் 2007, 2010, 2012 ஆகிய ஆண்டுகளில் வாங்கப்பட்டதால், அவற்றை பழுதுபார்ப்பதற்கு தேவையான உதிரி பாகங்கள் எதுவும் இல்லை என்று மகவர் நிறுவனத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. | இச்சொத்துக்கள் தொடர்பாக பொரத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆணைக்குழுவினால் 2004 சனவரி 01 ஆம் திகதிக்கு பின்னர் பெறப்பட்ட சொத்துக்களை மாத்திரம் நிதியல்லாச் சொத்துக்கள் கூற்றில் உள்ளடக்கியிருந்ததுடன் 2004 ஆம் ஆண்டுக்கு முன்னர் உள்ள சொத்துக்கள் அடையாளம் காணப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீட்டு குழுவொன்று நியமிக்கப்பட்டு, அனைத்து பொருட்களையும் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன், 2022 ஆம் ஆண்டில் பொருட் கணக்கெடுப்பு முடிந்த பினனர் கணக்கெடுப்பு பணிகள் ஆரம்பிக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | சபைக்கு சொந்தமான அனைத்து சொத்துக்களும் அடையாளம் காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

## 4. நல்லாட்சி

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 40 ஆம் பிரிவின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் உள்ளக கணக்காய்வு செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக பொருத்தமான கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டிய போதிலும், 2017 ஆம் ஆண்டு முதல் உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட்டு உள்ளக கணக்காய்வு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிறைவேற்றுத் தீர்மாமொன்றின் அடிப்படையில் இதற்கு முன்னர் உள்ளக ஆட்சேர்ப்பிற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டு நேர்முகப்பரீட்சை நடாத்தப்பட்டு தெரிவு செய்யப்பட்ட ஆணைக்குழுவின் அதிகாரி ஒருவர் தற்போது கடமைகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளார். | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 40 ஆம் பிரிவின் பிரகாரம் உள்ளக கண்ககாய்வு செயற்பாடுகள் செயற்படுத்தப்பட வேண்டிமை. |

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 41 ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு நிறுவனத்திற்கும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவொன்று இருக்க வேண்டிய போதிலும், 2017 வருடம் முதல் ஆணைக்குழுவின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நடாத்திச் செல்லப்பட்டிருகக்கவில்லை. | உளளக கணக்காய்வாளர் பதவி வெற்றிடமாக உள்ளதாலும், உரிய நிறைவேற்று அதிகாரிகள் போதுமான அளவு இல்லாததாலும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நியமிக்கப்படவில்லை. எவ்வாறாயினும், நியமிக்கப்பட்ட கணக்காய்வாளருக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின்படி மேற்கொண்ட பணிகளை ஆரம்பிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 41 ஆம் பிரிவின் பிரகாரம் செயற்பட வேண்டிமை. |

### 5. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக்கோவையின் II ஆம் தொகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 13.2 ஆம் பந்தியின் பிரகாரம் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு தரப்பினரும் அனைத்து பூர்வாங்க விசாரணைகளையும் விரைவாக முடிப்பதை எப்போதும் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அதன் 22.1 ஆம் பிரிவின பிரகாரம் முறையான ஒழுக்காற்று விசாரணையொன்று | இவ்விசாரணை முடிந்து இறுதி அறிக்கை பெறப்பட்டுள்ளது. அதன்படி, குற்றம் சாட்டப்பட்ட அதிகாரிக்கு கட்டாய ஓய்வூதியம் பெறுவதற்கு ஒழுக்காற்று கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது. | ஒழுக்காற்று விசாரணை நடவடிக்கைகள் விரைவில் முடிக்கப்பட வேண்டும். |

தேவையற்ற தாமதமாகத் தோன்றினால், அதனைத் தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பது ஒழுக்காற்று அதிகார சபையின் பொறுப்பாக இருந்தாலும், 2017ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஆரம்பிக்கப்பட்ட ஆரம்பக்கட்ட விசாரணைகள் நிறைவடைவதற்கு ஒரு வருடத்திற்கும் மேற்பட்ட காலமொன்று மற்றும் முறையான ஒழுக்காற்று விசாரணைகளுக்கு 04 வருடங்களுக்கு மேற்பட்ட காலமொன்றும் எடுக்கப்பட்டிருந்தன. மேலும், ஆணைக்குழுவின் முன்னாள் செயலாளர் தொடர்பான முறையான ஒழுக்காற்று விசாரணைக்கு கிட்டத்தட்ட 3 வருட காலமொன்று எடுக்கப்பட்டிருந்தது.

(ஆ) விசாரணை அதிகாரி தொடர்பான முதற்கட்ட விசாரணைக்குப் பிறகு 2018 செப்டம்பர் 10 அன்று குற்றப்பத்திரிக்கை வெளியிடப்பட்டிருந்ததுடன் 2018 திசெம்பர் 18 அன்று பதில் பெறப்பட்டது. முறையான ஒழுங்கு விசாரணை நடாத்துவதற்காக ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் அடிப்படையில் 2018 யூலை 12 அன்று விசாரணை ஹஅதிகாரி ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன் அதற்கான நியமனக் கடிதம் 2018 யூலை 31 அன்று் அனுப்பப்பட்டது. அதன்படி, தாபனக்கோவையின் மேற்கூறிய அத்தியாயத்தின் 15.9 ஆம் பந்திக்கு முரணாக ஆணைக்குழுவினால் குற்றம் சாட்டப்பட்ட அதிகாரிக்கு குற்றப்பத்திரிகையை

இவ்விசாரணை முடிந்து இறுதி அறிக்கை பெறப்பட்டுள்ளது. அதன்படி, குற்றம் சாட்டப்பட்ட அதிகாரிக்கு கட்டாய ஓய்வூதியம் பெறுவதற்கு ஒழுக்காற்று கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தாபனக்கோவையின் மேற்கூறிய அத்தியாயத்தின் 15.9 ஆம் பந்திக்கு இணங்கியதாக செயற்பட வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | வழங்குவதற்கு முன்பு முறையான ஒழுக்காற்று விசாரணைக்காக விசாரணை அதிகாரி நியமிக்கப்பட்டிருந்தார். | | |
| (இ) | 2022 திசெம்பர் 31 இல் ஆணைக்குழுவில் 25 சிரேஷ்ட நிலை வெற்றிடங்கள் , 36 மூன்றாம் நிலை வெற்றிடங்கள், 35 இரண்டாம் நிலை வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் ஆரம்ப நிலையில் 01 மிகையொன்று காணப்பட்டது. | சிரேஷ்ட நிலையில் 05 பதவிகளுக்கு பதில் பணி புரியும் அடிப்படையில், ஒப்பந்த அடிப்படை மற்றும் இரண்டாம் நிலை அடிப்படையில் அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். மூன்றாம் நிலையில் பதவியொன்றுக்காக ஒப்பந்த அடிப்படையில் ஒரு அதிகாரி பணியமர்த்தப்பட்டுள்ளதுடன் ஏனைய வெற்றிடங்கள் நிரப்பப்பட்டு வருகின்றன. | செயல்திறனை மோசமாக பாதிக்கும் அத்தியாவசிய பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |